புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜுலை 31, 2025 • புரட்சி 25 • முழக்கம் 33 • விலை ரூ.6.00

## ‘இந்தியா டுடே’ ஆய்வறிக்கை

# இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிர்வாகத் திறன் மேன்மையை ஐ.நா. அமைப்பும், ஒன்றிய அரசின் நிறுவனங்களும் பாராட்டியுள்ளன. தமிழ்நாடு இந்திய நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் முன்னணி மாநிலமாக திகழ்வதாக அதில் கூறப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் 2021 மே மாதம் 7ம் நாள் பொறுப்பேற்றது முதல் நிறைவேற்றி வரும் புதுமையான, புரட்சிகரமான திட்டங்களால் தமிழ்நாடு மிகக் குறுகிய காலத்தில் பல வெற்றிகளை பெற்று சாதனைகள் புரிந்து தேசிய அளவில் முதல் இடம் என்னும் பெருமையை நிலைநாட்டியுள்ளது.

‘இந்தியா டுடே ஆங்கில இதழ்’ ஒன்றின் இயக்குநர் கூறுகையில், “இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களின் செயல்பாடுகளை கணித்ததாகவும், அதில் ஒட்டு மொத்த செயல் திறனிலும் சிறந்து விளங்கும் பெரிய மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும்" குறிப்பிட்டிருந்தார்.

முதலமைச்சர், "இந்த கடிதத்தைப் படித்தபோது எனது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; இது தனிப்பட்ட எனக்கு கிடைத்த பெருமை அல்ல, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்த பெருமையாகும். தமிழ்நாட்டிற்கு கிடைத்த சிறப்பாகும்” என்று 29.11.2021 அன்று சென்னையில் நடந்த விருது வழங்கும் விழாவில் குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோயம்புத்தூர், கொடிசியா வளாகத்தில் 23.11.2021 அன்று நடந்த முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு மாநாட்டில், ‘தொழில் நிறுவனங்கள் நம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கு ‘நிலம்’ கையிருப்பு மிகப்பெரிய பங்காற்றுகிறது.அண்மையில் வெளிவந்த ஒன்றிய அரசினுடைய மாநிலங்களுக்கான IPRS தரவரிசையில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாக அறிவித்திருக்கிறது. இது நமக்கெல்லாம் பெருமை. நாம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற லட்சிய இலக்கினை அடைவது வெகு தொலைவில் இல்லை என்ற நம்பிக்கையை எல்லோருக்கும் அளித்துக் கொண்டிருக்கிறது’ என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

ஆங்கில இதழ் 2020 ஆய்வறிக்கையில், 2021 மே மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்பதற்கு முன் தமிழ்நாட்டில் இருந்த முந்தைய ஆட்சியில் தமிழ்நாடு எந்த அளவில் பின்தங்கி இருந்தது என்பதை 7.12.2020 நாளிட்ட, ‘ஆங்கில இதழ் ஆய்வு அறிக்கை’ புள்ளி விவரங்களோடு தெளிவுபடுத்தி இருந்தது, இந்திய அளவில் 20 மாநிலங்களை ஆய்வு செய்து வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் தமிழ்நாடு,

- உள்கட்டமைப்பில் 20வது இடம் - கடைசி இடம்
- ஐந்து ஆண்டுகளின் செயல்பாட்டில் 19வது இடம்
- விவசாயத்தில் 19வது இடம்
- சுற்றுலாவில் 18வது இடம்
- உள்ளடக்கிய வளர்ச்சியில் 18வது இடம்
- தொழில் முனைவோர் முன்னேற்றத்தில் 14வது இடம்
- ஆட்சி நிர்வாகத்தில் 12வது இடம்
- தூய்மையில் 12வது இடம்
- சுகாதாரத்தில் 11வது இடம்
- கல்வியில் 8வது இடம்

என அன்று நிலவிய தமிழ்நாட்டின் அஇஅதிமுக ஆட்சியின் அவல நிலையை படம் பிடித்துக் காட்டி உள்ளது ‘இந்தியா டுடே’ ஆய்வறிக்கை.

2023-24ம் ஆண்டிற்கான, ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பு திராவிட மாடல் ஆட்சியில் நீடித்த நிலையான வளர்ச்சி குறியீடுகள் குறித்த நான்காவது ஆய்வறிக்கையை 2024, ஆகஸ்ட் மாதம் வெளியிட்டது. அந்த அறிக்கையில், திராவிட மாடல் ஆட்சி தொலைநோக்கு சிந்தனைகளுடன் செயல்படுத்தி வரும் சீரிய திட்டங்களால் வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுச் சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று பாராட்டி உள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் 2023-24ம் ஆண்டிற்கான வளர்ச்சி குறித்த ஆய்வேடு மனித வளங்களை வளர்ப்பதில் மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களைவிட தமிழ்நாடு முன்னேற்றம் கண்டு இந்தியாவில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளது என்று பாராட்டி உள்ளது. ஒன்றிய அரசின் நிர்யாத் நிறுவனம் ஜவுளி துணிகள் ஏற்றுமதி குறித்து 2022-23ம் ஆண்டிற்கான ஆய்வறிக்கையில் தேசிய அளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த ஜவுளி துணிகளின் மதிப்பில் தமிழ்நாடு ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கினை, அதாவது, 22.58 சதவீத துணிகளை ஏற்றுமதி செய்து தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது என்று பாராட்டி உள்ளது.

2022-23ம் ஆண்டிற்கான தேசிய இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தக ஆண்டாய்வு பதிவுகள் குறித்த அறிக்கையில், தமிழ்நாடு மட்டும் 5.30 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்து இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது என்றும் அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் முத்திரை திட்டங்களில் ஒன்று புதுமைப்பெண் திட்டம். அரசு பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் படித்து உயர்கல்வியில் சேரும் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தினால் கல்லூரிகளில் சேரும் மாணவியர் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என மாநில திட்டக்குழு தனது ஆய்வின்மூலம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் 31.1.2025 அன்று 2024-25ம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. அதில், தோல் பொருட்கள் உற்பத்தி துறையில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சியில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு 2024ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் 79வது பொதுச்சபையில் சர்வதேச பணிமுனைப்பு குழு விருது United Nation Interagency Task Force Award 25.9.2024 அன்று அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது. 2024-25ம் ஆண்டில் பொருளாதாரத்தில் தமிழ்நாடு 9.69 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்துடன் இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மேலும் இது, கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் ஆகும்.

இதற்கு முன், 2017-18ம் ஆண்டில் அதிக வளர்ச்சி வீதம் 8.59 சதவீதமாக இருந்தது. 2020-21ம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் குறைந்தபட்சமாக 0.07 சதவீதம் என பதிவாகியது. இக்காலகட்டத்தில் பல மாநிலங்களில் வளர்ச்சி இறங்கு முகமாக இருந்தன. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் வளர்ச்சி ஏறுமுகமாகவே இருந்தது என குறிப்பிட்டு பாராட்டப்பட்டது.

# ஜாதி ஆணவப் படுகொலை; திராவிடர் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்!

ஆணவ படுகொலைகளை தடுக்க ஜாதி ஆதிக்க மனநிலையில் இருந்து அம்மன நிலையில் உள்ளோர் வெளியில் வரவேண்டும் என கோரிக்கை!

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை: தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியை சேர்ந்தவர் கவின் செல்வ கணேஷ் (27) கவினை 27.7.25 அன்று பாளையங்கோட்டையில் சுஜித் என்பவர் வெட்டி படுகொலை செய்கிறார்.

கவின் பட்டியல் சமூகத்தையும் சுஜித் பிற்படுத்தப்பட்ட சமூகத்தையும் சார்ந்தவர்கள். சுஜித்தின் சகோதரியை கவின் காதலித்த காரணத்தினால் கவினை சுஜித் ஜாதி ஆணவப் படுகொலை செய்துள்ளார் என்பது தெளிவாகிறது.

ஜாதி ஆணவப் படுகொலை செய்த சுஜித் தானாக முன்வந்து காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அவர் கைது செய்யப்பட்டு தற்பொழுது அவர் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ச்சப்பட்டுள்ளது. கவின் பெற்றோர் சரவணன், கிருஷ்ணவேணி ஆகியோர் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் மீதும் வழக்கு போடப்பட்டு அவர்கள் தற்காலிக பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் கொலை செய்யப்பட்ட கவினின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கொலையாளி சுஜித்தின் பெற்றோரையும் கைது செய்ய வேண்டும் என்று போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

ஜாதி ஆணவப் படுகொலை நடந்த உடன் உடனடியாக கைது நடவடிக்கை எடுத்த தமிழ்நாடு அரசுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



மேலும் இந்தப் படுகொலையில் சுஜித்தின் பெற்றோர்கள் உள்ளனரா என்பதை உடனடியாக விசாரித்து அதற்கு முகாந்திரம் இருந்தால் அவர்கள் பெற்றோரையும் தமிழ்நாடு அரசு உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஜாதி ஆணவப் படுகொலை நடந்த உடன் இது பெரியார் மண்ணா? இதுதான் திராவிட மாடல் ஆட்சியா? என்பது போன்ற கேள்வி இம்மண்ணில் ஜாதி ஒழிப்பிற்காகவும் சமத்துவத்திற்காகவும் போராடும் பெரியாரியல்வாதிகளை நோக்கியும் திமுக அரசை நோக்கியும் மட்டுமே கேட்கப்படுகிறது.இது திராவிட எதிர்ப்பு மனநிலையில் உள்ளவர்களால் உள்நோக்கத்தோடு கேட்கப்படும் பார்ப்பன ஊடகங்களால் திட்டமிட்டு பரப்பப்படும் ஒரு பரப்புரை யுக்தியே ஆகும். இது ஜாதிய மனநிலையில் இருக்கும் பெரும்பாலான பொதுச் சமூகத்தின் பொறுப்பை தட்டிக் கழிப்பதே ஆகும். அதே நேரம் ஜாதி ஆணவப் படுகொலைகளை ஊக்கப்படுத்தும் ஜாதி சங்கத் தலைவர்களின் தூண்டுதல்களையும் மறைக்கும் செயலே ஆகும்.

தற்பொழுது ‘குடி தேசியம்’ எனும் பெயரில் போலி தமிழ் தேசியவாதிகள் ஜாதியின் பெயரை ‘குடி’ என மாற்றி அது பெருமைக்குரியது என்று பேசி வருவதும், ஆணவப் கொலைகளை ‘குடிப்பெருமைக் கொலை’ என்று கூறுவதும் இது போன்ற கொடூரக் கொலைகளுக்கு காரணமாக இருக்கிறது என்பதையும் மறைத்து விட்டு முற்போக்காளர்களை கேள்வி கேட்பதும் நிகழ்கிறது.

ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு அடிப்படை காரணம் ஜாதியப் பெருமை கொண்ட மனநிலையே ஆகும். தொடர்ந்து ஜாதி அமைப்புக்கு எதிராகவும் ஆதிக்க ஜாதி வெறிக்கு எதிராகவும் ஜாதிய வன்கொடுமைகளுக்கு எதிராகவும் சமத்துவத்திற்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருப்பது திராவிடர் விடுதலைக் கழகம். ஜாதியப் பாகுபாட்டிற்கு அடிப்படையான சனாதன கோட்பாடு, மனுதர்மம் இவற்றிற்கு எதிரான பரப்புரைகளை இன்னும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டியதையும் இந்த அடிப்படைகளை தகர்ப்பது தான் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்

மேலும் குறிப்பிட்ட ஆதிக்க சமூகம் அதிகம் வசிக்கும் பகுதியில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர் காவல்துறையில் உயர் பொறுப்பில் வரக்கூடாது என்றும் ஜாதி மறுப்புத் திருமணம் செய்யும் இணையர்களுக்கு தக்க பாதுகாப்பும் அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதையும் நாம் தொடர்ந்து கோரிக்கையாக எழுப்பி வருகிறோம். புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் "ஜாதி என்பது ஒரு மனநோய்" என்று குறிப்பிடுகிறார். ஜாதியப் பெருமை மிக்கவர்கள் மனநோயாளிகளாக மாறித்தான் இது போன்ற கொடூரக் கொலைகளை ‘குடி’ பெருமைக்காக செய்வது என்பது நிகழ்கிறது. இவற்றைத் தடுப்பதற்கான பொறுப்பும் கடமையும் ஒட்டுமொத்த சமூகத்திற்கு உண்டு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

-"கொளத்தூர் மணி,"
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்,
30.07.25

## தலையங்கம்

# காசாவில் இனப்படுகொலை

ஒவ்வொரு நாளும் காசாவில் இருந்து வரும் செய்திகள் உள்ளத்தை உலுக்குகிறது. இந்த படுகொலை எப்போது முடிவுக்கு வரும்? மனிதம் செத்துவிட்டதா? என்ற கேள்விகள் துளைத்தெடுக்கின்றன. நடப்பது இனப்படுகொலைதான் என்று நார்வேயில் உள்ள சர்வதேச நீதிமன்றம் அறிவித்துவிட்டது. தென்னாப்பிரிக்கா நாடு தொடர்ந்த இந்த வழக்கில் இந்த முடிவுக்கு வருவதற்கு சர்வதேச நீதிமன்றம் நீண்ட காலம் எடுத்துக் கொண்டது. 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி பாலஸ்தீன போராளி குழு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதில் இருந்து, இஸ்ரேலினுடைய தாக்குதல் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இதுவரை 51,821 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெண்களும், குழந்தைகளும் ஆவார்.

சடலங்களை அடக்கம் செய்வதற்குக் கூட இடமில்லை என்று தகவல்கள் கூறுகின்றன. யுத்தம் தொடங்கியபோதே காசாவில் வாழ்ந்த மக்கள் 23 லட்சம் பேர். இதில் 90% பேர் இருப்பிடங்களை பலமுறை மாற்றிக்கொண்டு உயிர் வாழ்கின்ற கட்டாயத்திற்கு உள்ளானார்கள். 46 சதுர கிலோமீட்டர் பகுதிக்குள் இவர்கள் முடக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சதுர கிலோமீட்டரில் 43,438 பேர் குவிக்கப்பட்டுள்ளார்கள். உணவு, உடல் நலம், மருத்துவம் அனைத்தும் சீரழிந்து விட்டது என்று அய்.நா. அமைப்புகள் கூறுகின்றன. பாலஸ்தீனியர்களின் உயிர் வாழ்க்கை திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது.

பரிதவிக்கும் மக்களுக்கு நிவாரண உதவிகள் தடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு தொடக்கத்தில் உணவு, தண்ணீர் வழங்குவதற்கு முழுமையான தடை விதிக்கப்பட்டது. காசா மக்களின் மனித மாண்பு பறிக்கப்பட்டு விட்டது என்று அய்.நா. கூறுகிறது.

வெளிநாட்டு ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் வழியாக நிதி உதவி பெறுவதற்கும் தடை. அண்மையில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட 30 நாடுகள் இணைந்து இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற படுகொலைகளை அழுத்தமாக கண்டித்துள்ளன. அடிப்படை தேவைகளுக்கான மனிதாபிமான உதவிகளை தடுக்கிறது என்றும், இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றும் இஸ்ரேல் காசா பகுதியில் இருந்து பாலஸ்தீனர்கள் முற்றாக அப்புறப்படுத்துகிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இஸ்ரேல் நாட்டில் இருந்தே இரண்டு மனித உரிமை அமைப்புகள் காசாவில் நடப்பது இனப்படுகொலை என்று இஸ்ரேல் அரசுக்கு எதிராக கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால் இந்த எதிர்ப்புகளுக்கு இஸ்ரேல் செவி சாய்க்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்கி தீவிர ஆதரவளிக்கும் ஜெர்மனியும் அமெரிக்காவும் இந்த கூட்டறிக்கையில் கையெழுத்திட மறுத்துவிட்டன.

பாலஸ்தீனர்களின் காசாவை தங்களின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதே நோக்கம் என்று இஸ்ரேல் தலைவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர். இஸ்ரேல் நாட்டின் இரண்டு முன்னாள் பிரதமர்கள் எகட் ஒல்மார்ட் (Ehud Olmert), ஏர்லேப்பிட் (Yair Lapid) காசா இப்போது சித்திரவதை முகாம் என்று பெருமைப்படுகிறார்கள். காசாவில் கடும் பஞ்சம் உருவாகும்போது மக்களே தங்களுக்குள் மோதிக் கொள்வார்கள் அப்போது பிரச்சினை முடிவுக்கு வரும் என்று இஸ்ரேல் நாளேடு (Jean Dreze) வெளிப்படையாகவே எழுதுகிறது.

இஸ்ரேல் தாக்குதல் தொடங்கிய நாளிலிருந்து இருந்து அய்.நா. பொதுச் சபையில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக 10 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதில் 7 தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்த இந்தியா, 3 தீர்மானங்களுக்கு வாக்கெடுப்பில் பங்கேற்காமல் ஒதுங்கி இஸ்ரேலுக்கு மறைமுக ஆதரவை தெரிவித்தது.

காசாவில் நடக்கும் இனப்படுகொலயை நிறுத்த வலியுறுத்தி கடந்த ஜூன் மாதம் கொண்டுவரப்பட்ட அய்.நா.வின் முக்கியமான தீர்மானத்தில் இந்தியா வாக்களிக்காமல் புறக்கணித்தது மிகப்பெரிய துரோகமாகும்.

பாலஸ்தீனியத்துக்கு ஆதரவாக ஈரான் இருப்பதால் அந்த நாட்டின் மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்லை தொடங்கியது. இதை கண்டித்து சர்வதேச கூட்டமைப்பு (Shanghai Co-operation Organisation) கண்டன அறிக்கை வெளியிட்டது. இதில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது. இதன் மூலம் வெளிப்படையாக தனது இஸ்ரேல் ஆதரவை அது வெளிக்காட்டி காட்டிக் கொண்டது.

நேரு காலத்திலிருந்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவான நிலைப்பாடுகளையே இந்தியா எடுத்து வந்தது. பாஜக படிப்படியாக இதில் நடுநிலைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கி, இப்போது இஸ்ரேல் பக்கம் சாய்ந்து விட்டது.

இந்தியா-பாகிஸ்தான், காம்போடியா-தாய்லாந்து யுத்தங்களை எல்லாம் நிறுத்திவிட்டதாக தம்பட்டம் அடிக்கும் அமெரிக்க அதிபர் டிரம்ப், காசா இனப்படுகொலைக்கு எதிராக ஏன் குரல் கொடுக்கவில்லை. இதில் அமெரிக்காவும் இந்தியாவும் ஒரே நேர்கோட்டில் பயணிப்பதற்கான காரணம் இசுலாமிய வெறுப்பு அல்லாமல் வேறு என்ன?

தேசங்களும், நாடுகளும் மக்களைக் காப்பாற்றுவதற்காக இல்லாமல் தங்களுடைய அதிகாரங்களைக் காப்பாற்றுவதற்காக துடித்துக் கொண்டிருக்கின்றன என்பதே காசாவின் இனப்படுகொலை உணர்த்துகிறது.

## "விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதல்ல நீதித்துறை"

நீதித்துறை மீதான விமர்சனங்கள் வைக்கப்படும்போதெல்லாம் நீதிமன்ற அவமதிப்பு என்கிற "பூச்சாண்டி" காட்டப்படுவது வழக்கமாகி வருகிறது.

நீதிமன்றங்களும், தீர்ப்புகளும், நீதிபதிகளின் நடவடிக்கைகளும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவையா என்றால் இல்லை...!

அரசமைப்பு சட்ட சரத்து 19 (1) (a) படி இந்திய குடிமக்களுக்கு பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை வழங்குகிறது. இதன் பொருள், ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் தனது கருத்துக்களை எந்த தடையும் இன்றி வெளிப்படுத்தவும், சுதந்திரமாகப் பேசவும் உரிமை உண்டு. ஆனால், இந்த உரிமை வரம்புகள் இல்லாமல் இல்லை. சில குறிப்பிட்ட காரணங்களுக்காக இந்த உரிமை அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படலாம்.

அதாவது சரத்து 19 (2) படி இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு, மாநிலத்தின் பாதுகாப்பு, வெளிநாட்டு நாடுகளுடனான நட்புறவு, பொது ஒழுங்கு, கண்ணியம் அல்லது ஒழுக்கம் அல்லது நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றத்தைத் தூண்டுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக பேச்சு மற்றும் கருத்துரிமை கட்டுப்படுத்தப்படலாம். இதில் நீதிமன்ற அவமதிப்பு என்பதைத்தான் நீதிபதி திரு.ஜி.ஆர் சுவாமிநாதன் கையில் எடுத்திருக்கிறார்.

சரி...நீதிமன்ற அவமதிப்புச் சட்டம், 1971 சொல்வதைப் பார்ப்போமே. நீதிமன்ற அவமதிப்புச் சட்டம்,1971, பிரிவு 4 சொல்வது:

சட்டப்பிரிவு 7-ன் அடிப்படையில், நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான நியாயமான மற்றும் துல்லியமான அறிக்கையை வெளியிடுவது நீதிமன்ற அவமதிப்பாகாது.

சட்டப்பிரிவு 7-ன் படி, நீதிமன்றத்தின் செயல்பாடுகள் அல்லது அதன் எந்தவொரு நிலையையும் பற்றிய நியாயமான மற்றும் துல்லியமான அறிக்கையை வெளியிடுவது, நீதிமன்ற அவமதிப்பு குற்றமாகாது.

அதாவது, நீதிமன்ற நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் நோக்கில், உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களை வெளியிட்டால், அது நீதிமன்ற அவமதிப்பு என்று கருதப்படாது.

சாதாரணமாக, நீதிமன்ற அவமதிப்பு என்பது நீதிமன்றத்தின் செயல்பாடுகளை அவமதிப்பது அல்லது நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காமல் இருப்பது போன்ற செயல்களைக் குறிக்கும். ஆனால், சட்டப்பிரிவு 7, நீதிமன்ற நடவடிக்கைகளின் அறிக்கைகளை வெளியிடுவதில் உள்ள நியாயமான எல்லைகளை வரையறுக்கிறது.

எனவே, நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான நியாயமான மற்றும் துல்லியமான அறிக்கையை வெளியிடுவது, நீதிமன்ற அவமதிப்பாகாது.

சட்டப்பிரிவு 5 சொல்வது: சட்டத்தின் முன், ஒரு வழக்கு முடிவடைந்துவிட்ட பிறகு, அதன் நியாயங்களைப் பற்றிய நியாயமான விமர்சனத்தை வெளியிடுவது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படாது.

சட்டத்தின்படி, ஒரு நபர் ஏற்கெனவே தீர்ப்பு வழங்கப்பட்டு, முடிவு செய்யப்பட்ட ஒரு வழக்கின் அம்சங்களைப் பற்றி நியாயமான கருத்தைத் தெரிவித்தால், அது நீதிமன்ற அவமதிப்பு குற்றமாகாது.

சுருக்கமாக, ஒரு வழக்கு முடிவடைந்த பிறகு, அதன் தீர்ப்பைப் பற்றி ஒரு நியாயமான விமர்சனம் வைப்பது நீதிமன்ற அவமதிப்பு அல்ல. மேலும், பிரசாந்த் பூசன் வழக்கிலும், அருந்ததி ராய் வழக்கிலும் நீதித்துறையின் மீதான விமர்சனங்கள் அனுமதிக்கவேப்பட்டிருக்கின்றன. நீதிபதி.திரு.ஜி.ஆர் சுவாமிநாதன் அவர்களினின் மீதான விமர்சனத்திற்கு ஆதாரத்துடன் உச்ச நீதிமன்றத்துக்கு கொண்டு சென்றதற்காக வழக்குரைஞர் தோழர். வாஞ்சிநாதன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஏன் தொடுக்கக் கூடாது என்று நீதிபதி.திரு.ஜி.ஆர் சுவாமிநாதன் கேள்வி எழுப்பியிருப்பதாக சொல்லப்படுகிறது. இதற்கு வழக்குரைஞர் தோழர்.வாஞ்சிநாதன் எழுத்துப் பூர்வமாக கேட்கப்பட்டால் பதில் தருவதாக சொல்லியிருக்கிறார்.

இப்படி சட்டமே அனுமதித்த உரிமையில் நீதிபதி.திரு.ஜி.ஆர் சுவாமிநாதன் கைவைப்பது சட்டத்திற்கு புறம்பான ஒன்றே. நீதிக்கான சமர் செய்யும் வழக்குரைஞர் தோழர்.வாஞ்சிநாதன் அவர்களுக்கு துணை நிற்போம்.

**-பேரன்பு**
**(தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்)**

# கழக ஏட்டுக்கு நன்கொடை

கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் அவரது மகன் இளம்பரிதியின் 12வது பிறந்தநாளை முன்னிட்டு ரூ.12000 கழக ஏட்டுக்கு நன்கொடை வழங்கினார்.

கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி குழுவில் இணைந்த தோழர் இளங்கோ (சிவகங்கை மாவட்டம்) ரூ.4000, தோழர் தாமோதரன் ரூ.1000 கழக ஏட்டுக்கு நன்கொடை வழங்கினர். மேலும் குழுவில் இணைந்து செயல்பட உள்ளனர். கழகத் தோழர் அஜித் ரூ.1000 வழங்கினார்.




**இராயப்பேட்டையை சேர்ந்த கழக ஆதரவாளர் தோழர் சபரி கழகத் தலைமை அலுவலகத்துக்கு ரூ.85000 மதிப்புள்ள இரண்டு குளிர்சாதனப் பெட்டி-களை நன்கொடையாக வழங்கினார். தோழரை பாராட்டி கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழக வெளியீடுகளை வழங்கினார்.**

## பெரியார் நடத்திய ‘ரிவோல்ட்’ வெளியிட்ட பட்டியல்

# மதவெறிக்கு உயிர்ப் பலியானவர்கள்

### கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை (9)

**கடவுள், மதத்தை எதிர்த்ததால் கொடூரமாக கொல்லப்பட்டவர்களின் பட்டியலை பெரியார் நடத்திய ரிவோல்ட்’ ஆங்கில வார ஏடு, 7-7-1929 இதழில் வெளியிட்டது. அதன் விவரம்.**




● புதிய சிந்தனைகளை வெளியிட்டமைக்காகப் பண்டைய கிரேக்க அறிஞர் பித்தகோரஸ் பழமை வெறியர்களால் பாய்ந்து துரத்தப்பட்டு, கடலில் மூழ்கி தற்கொலை செய்து கொண்டார்.

● இளைஞர்களை அரசு ஏற்றுக் கொண்ட ‘கடவுளர்’ களிடமிருந்து பிரித்தார் என்று குற்றஞ்சுமத்தப்பட்டு, நஞ்சு தரப்பட்டு சாகடிக்கப்பட்டார் சாக்ரட்டீஸ்.

● கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மத நிறுவனத்தைத் துணிவாக எதிர்த்த ப்ரெஷ்யாவின் ஆர்னால்டு தூக்கு மரத்தில் தொங்கவிடப்பட்டார்.

● மத நிறுவனத்தின் தீயபண்புகளை 15ஆம் நூற்றாண்டில் எதிர்த்த இத்தாலியச் சீர்திருத்தக்காரர் சவோன ரோலாவை தேடிப் பிடித்து உயிருடன் எரித்தனர்.

● 16-ஆம் நூற்றாண்டில் அறிவு விடுதலை வேண்டிப் போராடிய பாவியாவின் உல்ரிச் வான் ஹட்டன் உடைமைகள் அனைத்தையும் இழந்து விட்ட நிலையில் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு அடிமட்டப் பணியாளர் படையில் சேருமாறு நேரிட்டது.

● அதே நூற்றாண்டில் சீர்திருத்தக்காரர் தாமஸ்முவென்ஸர் மத வெறியர்களால் கொல்லப்பட்டார்.

● பகுத்தறிவு நூல் பதிப்பாளர் எட்டியர் டோலட் சமய எதிர்ப்பாளனாகக் கருதப்பட்டு எரிக்கப்பட்டார்.

● மதவாதிகளால் மிரட்டப்பட்டு பணிந்து தான் முதலில் கூறியதை மாற்றிக் கூற மறுத்து விட்ட புகழ்பெற்ற மருத்துவர் மிக்கேல் செர்வட்டஸ் கொல்லப்பட்டார்.

● ரபெலா என்னும் கற்பனைத் தெய்வ நம்பிக்கையாளர் தான் வாழ்ந்த ஃப்ரான்ஸிஸ்கள் மடத்தில் பகுத்தறிவாளராக மாறியதால் சிறைக்கு அனுப்பப் பட்டார்.

● 17-ஆம் நூற்றாண்டில் உரியேல் அகோஸ்டா மதத்தை கேள்வி கேட்டதால் தொடர்ந்து துன்புறுத்தலுக்கு இலக்காகி இறுதியில், தானே சுட்டுக் கொண்டு மாண்டு போகுமாறு செய்யப்பட்டார்.

● மத நம்பிக்கைக்கு எதிரான அறிவியல் கருத்து வெளியிட்ட ஜியார்டனோ ப்ரூனோவை உயிரோடு எரித்துக் கொன்றனர்.

● கருத்துரிமை எழுத்தாளர் லூசிலியோவை நாத்திகக் கருத்துகளைப் பரப்பினார் என்று தீர்ப்பளித்து உயிருடன் எரித்தனர்.

● கலிலியோவை இருண்ட சிறையில் போட்டு வாட்டியெடுத்தனர்.

● முற்போக்கு எழுத்தாளர் மாலியர் மாண்டு கிடந்த போது முறைப்படி அவரை அடக்கம் செய்ய மறுத்து விட்டனர்.

● ஸ்பையினாஸா என்ற ஸ்பானிய யூத அறிஞர் மதக் கொள்கைக்கு மாறுபட்ட கோட்பாட்டை வெளிப்படுத்தியமைக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையில் ஹாலந்துக்கு ஓடிப்போய் எளிய வாழ்வு மேற்கொள்ள நேர்ந்தது.

● புகழ் பெற்ற ஃப்ரெஞ்ச் எழுத்தாளர் பாய்ல் மத எதிர்ப்பாளர் என்னும் குற்றம் சுமத்தப்பட்டதுடன் அவரின் உடைமைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

● வேதியியல் வல்லுநர் ஜோஹன் கொன்ராட்டிப்பேல் பலமுறை தலைமறைவாகவும் ஏழாண்டுகள் சிறைவாழ்வு ஏற்கவும் நேர்ந்தது.

● ஃப்ரெஞ்ச் மத எதிர்ப்பாளர் லாமெட்ரியின் நூற்களெல்லாம் எரிக்கப்பட்டன. நாட்டை விட்டே ஓடியொளிய வேண்டியிருந்த அவர் இரண்டாம் ஃப்ரெடரிக் மன்னரிடம் புகலிடம் தேடிக் கொள்ள வேண்டியிருந்தது.

● ஜெர்மானியப் பதிப்பாளர் ஜோஹன் ஜேகப் மோசர் அய்ந்தாண்டுகள் கடுங்காவலில் வைக்கப்பட்டார்.

● நாத்திகக் கருத்துக்களை எழுதினார் என அறிவிக்கப்பட்டு, டைடராட் என்ற அறிஞர் சிறை வாழ்வு வாழ வேண்டியிருந்தது.

● டான் சூபார்ட் எனும் ஜெர்மானிய நூலாசிரியர் மத எதிர்ப்பாளராகத் தீர்ப்பளிக்கப்பட்டு, விளக்கம் கூற வாய்ப்பளிக்கப்படாமல், 10 ஆண்டுகள் கடுங்காவலில் இருக்குமாறு செய்யப்பட்டார்.

● ‘மார்ஸேல்ஸ்’ எனும் நூலாசிரியரான ரோஜர் டிலைல் தனது இறுதிக் காலத்தைச் சிறைக்கூடத்தில் கழிக்க நேரிட்டது.

● 19ஆம் நூற்றாண்டில் கருத்துரிமைக்குப் போராடிய மெசன் ஹாசர் சட்டப்படியே வெளிப்படையாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

● அதே போன்று ஜெர்மன் குடியாட்சிக் கொள்கையரான ராபர்ட்ப்ளம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

● ஃப்ரெஞ்ச் இசைக்கலைஞர் பெராங்கர் 10,000 ப்ராங்க் ஒறுப்புத் தொகை கட்டியதுடன் ஓராண்டு சிறை வாழ்வும் மேற்கொண்டார்.

● மடமையொழிப்பு முயற்சியில் ஈடுபட்ட ஃப்ரான்ஸிஸ்கோ ஃபெரர் இயேசுநாதர் சங்க உறுப்பினர்களின் தூண்டலின் விளைவாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப் படுகொலைகள் பட்டியலை வெளியிட்டு அதற்கு கீழே பெரியார் ஒரு குறிப்பை எழுதினார்.

**“இந்தியாவிலும் இதே நிலைதான் நீடிக்கிறது; சுயமரியாதைக்காரர்களாகிய நமக்கும் இந்த நிலை ஏற்பட்டால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். மனித சமுதாயத்தை குறைந்த அளவேனும் சிந்திக்க தொடங்கி விட்டோம் என்ற மன நிம்மதியோடு மரணத்தையும் நாம் சந்திப்போம், அதற்கு தயாராகவே இருப்போம்”** என்று பெரியார் எழுதினார்.


“இந்தியாவிலும் இதே நிலைதான் நீடிக்கிறது; சுயமரியாதைக்காரர்களாகிய நமக்கும் இந்த நிலை ஏற்பட்டால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். மனித சமுதாயத்தை குறைந்த அளவேனும் சிந்திக்க தொடங்கி விட்டோம் என்ற மன நிம்மதியோடு மரணத்தையும் நாம் சந்திப்போம், அதற்கு தயாராகவே இருப்போம்”


நாத்திக கொள்கைக்காக தூக்கு மேடையில் ஏறவும் தயார் என்று 1929-ல் குடி அரசில் பெரியார் எழுதினார்.

**"தூக்குமேடையில் இருந்துகொண்டு நான் நாஸ்திகன்தான் அதுவும் நல்ல பரிசுத்தமான நாஸ்திகன்தான் என்று கூப்பாடு போட்டுச் சொல்லிக் கொள்ளத் தயாராயிருக்கின்றேன் பிறவியின் காரணமாக மனிதனுக்கு மனிதன் ஒரு நீதியும் ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும் உள்ள எந்த மதமானாலும் சரி, அது ‘கடவுளை’ நேரே கொண்டுவந்து காட்டி, மோட்சத்திற்கு அழைத்துச் செல்லச் செய்யும் மதமாயிருந்தாலும் சரி, அல்லது நம்மையே கடவுளாக்கும் மதமாயிருந்தாலும் சரி, அதை அழிக்க வேண்டியதும் அழிக்க முடியாவிட்டாலும் அந்த அழிக்கும் வேலையில் உயிரை விடவேண்டியதும் உண்மையான மனிதனது கடமை என்றுதான் நான் தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன். இதில் சிறிதும் ராஜிக்கு இடமில்லை என்பதைக் கண்டிப்பாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."**

*(குடிஅரசு: 19-5-1929)*

## வழக்கறிஞர் வாஞ்சிநாதனுக்குத் துணைநிற்போம்!

***கழகத் தலைவர் அறிக்கை!***

"பாஜக ஆட்சியில் நீதித்துறை தனது தன்னாட்சியை இழந்து வருவதோடு ஆளுகின்ற அரசின் ஓர் உறுப்பாக தொடர்ந்து மாறி வருகிறது.ஆர்எஸ்எஸ் சார்பு நீதிபதிகள் வெகுவாகப் பதவியில் அமர்த்தும் போக்கும் கூடுதலாகியுள்ளது. நீதிபதி ஜி.ஆர் சாமிநாதன் அவர்களை விமர்சித்து உச்ச நீதிமன்றத்திற்கு ஆதாரங்களுடன் கொண்டு சென்றதற்காக,மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரும் வழக்குரைஞருமான தோழர் வாஞ்சிநாதன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஏன் தொடுக்கக் கூடாது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் ஜி.ஆர்.சாமிநாதன். மேலும் தோழர் வாஞ்சிநாதன் பேசியதற்கு உரிய பதிலளிக்க வேண்டும் எனவும் ஆணையிட்டுள்ளார்.

மதுரையைக் குறிவைத்து இந்து பார்ப்பனியக் கூட்டம் ஒரு கலவரத் திட்டத்துடன் மதுரையின் மத நல்லிணக்க மரபை சிதைக்க களமிறங்கியுள்ளது. இந்நிலையில் மக்கள் மன்றத்திலும் நீதிமன்றத்திலும் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமத்துவ, ஜனநாயக , மதச்சார்பின்மை மரபுகளைக் காக்கத் தொடர்ந்து தோழரும் வழக்குரைஞருமான வாஞ்சிநாதன் போராடி வருகிறார்.

வைதீக, சநாதன காலமல்ல இது. சீசருடைய மனைவி விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்கவேண்டும் என்பது நீதிபதிகளுக்கு அதிகம் பொருந்தும் ஒரு சொலவடையாகும். ஒரு ஜனநாயக நாட்டில் நீதிபதிகளும் நீதிமன்றமும் மக்கள் மன்றத்தின் விமர்சனத்திற்கும் திறனாய்வுக்கும் உட்பட்டது தான். திறனாய்வை உள்வாங்கி தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள முயலாமல், தோழர் வாஞ்சிநாதன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைக் கொண்டு மிரட்ட எண்ணும் போக்கு ஜனநாயக மரபுகளைக் கேலி செய்யும் தன்மையதாகும். மக்களுடைய உரிமைகளுக்காகப் போராடும் தோழர் வாஞ்சிநாதனுக்குத் துணைநிற்போம்!"

(இணைப்புக் கடிதம் : அரசியல் சட்டத்தை மீறி செயல்படும் நீதிபதி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்திற்கு வழக்கறிஞர் வாஞ்சிநாதன் அனுப்பிய புகார் என இணையதளத்தில் பரவி இருப்பது)

**-"கொளத்தூர் மணி,"**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்,**
***30.07.25***

## "மனிதம் நமது அடையாளம்! ஜாதி அவமானம்!"

சமூகத்தில் தொடர்ந்து நடைபெறும் ஜாதியப் படுகொலைகளை (ஆணவ கொலைகள்) தடுக்க சட்டம் மட்டும் போதாது மக்களின் மன உணர்வுகளில் இருந்து அதை நீக்க வேண்டும்.

நாகரீக சமூகமாக இந்த தமிழ் சமுதாயத்தை மாற்றி அமைக்கப் போராடியவர் பெரியார். அவர் தொடங்கிய இயக்கம் தொடர்ந்து ஜாதி எதிர்ப்பு, சடங்கு மறுப்பு கருத்தியலை வலிமையாக பிரச்சாரம் செய்து வருகின்றது. அதன் விளைவாக இன்று பல்வேறு மாற்றங்கள் வந்து இருக்கின்றன. தமிழ்நாட்டில் யாரும் பெயருக்குப் பின்னால் ஜாதி போடும் வழக்கத்தைப் பின்பற்றுவது இல்லை.

ஆகவே அதன் தொடர்ச்சியாக திராவிடர் விடுதலைக் கழகம் பல்வேறு தலைப்புகளில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரைகளை தமிழ்நாடு முழுவதும் நடத்தியது. தீண்டாமை கடைபிடிக்கும் கிராமங்களை கள ஆய்வு செய்து பட்டியல் தயாரித்து SC/ST ஆணையத்திடம் மனு அளித்தது. தற்போது இது தொடர்பாக வழக்கும் தொடர்ந்து உள்ளது. ஜாதிவெறி சிந்தனைகளில் இருந்து இளைஞர்களை மீட்க சென்னை மாவட்டக் கழகம் **"மனிதம் நமது அடையாளம்! ஜாதி அவமானம்!"** என்ற தலைப்பில் தொடர் தெருமுனைக் கூட்டங்களை அமைப்பு தொடங்கிய நாளான ஆகஸ்டு-12ம் தேதி முதல் நடத்தவுள்ளது.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கொக்கூருக்கு குதிரை வண்டியில் வந்த பெரியார்

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ர.பிரகாசு எழுதி வருகிறார். கொக்கூர் என்ற ஊரின் வரலாறு இது..**

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் ஒன்றியத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் கொக்கூர். 1940-கள் வரை பார்ப்பனிய மேலாதிக்கம் கொடூரமாக கோலோச்சியது, அந்தக் கிராமத்தில். கிருஷ்ணமூர்த்தி ஐயரின் மகன் குஞ்சிதபாதம் குடும்பத்தின் கட்டுப்பாட்டில்தான் மொத்த ஊரும். பார்ப்பனர்களைத் தவிர, வேறு யாரும் மேல் சட்டை அணியக்கூடாது, காலில் செருப்பு போடக்கூடாது, பள்ளிக்கூடம் செல்லக்கூடாது, முக்கிய சாலைகளைப் பயன்படுத்தக் கூடாது.

தோளில் துண்டு, தலைப்பாகை கட்டவும் அனுமதி கிடையாது, ஊர்க்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது. பார்ப்பனர்களின் வயல்களில்தான் வேலை செய்ய வேண்டும். ஐயர் தரும் மிகச்சொற்ப நெல்லுக்காக, அக்ரஹாரத்துக்கு வெளியே தென்னை மரத் தடுப்புக்குப் பின்னால் வரிசையில் கையைக் கட்டிக்கொண்டு நிற்க வேண்டும். ஐயரின் ஆட்கள் தரும் நெல்லை வாங்கிக்கொண்டு, ஒற்றையடிப்பாதையில் செல்லவேண்டும்.

இந்தக் கட்டுப்பாடுகளை மீற, கொக்கூரில் இருந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த எவருக்கும் துணிவு இல்லை. ஆனால், முதன்முதலாக சில சிறுவர்களுக்கு அந்தத் துணிச்சல் வந்தது.

1950-களில் குத்தாலம், மயிலாடுதுறைப் பகுதிகளில் நடைபெற்ற திராவிடர் கழகக் கூட்டங்களைப் பார்த்து, சிறுவர்களுக்கு அந்தத் துணிச்சல் வந்தது. அதன்பிறகு பழைய ‘விடுதலை’ இதழ்களை வாங்கி வந்து, ஊருக்கு வெளியே கருவேலாங்காட்டிற்கு எடுத்துச் சென்று வாசித்தனர். அதன்மூலம் அந்தச் சிறுவர்கள் பெரியாரைப் பற்றிக்கொண்டனர்.

ஐயர் குஞ்சிதபாதத்தை எதிர்த்த அந்த சிறுவர்களில் ஒருவர் பெயரும் குஞ்சிதபாதம். முருகையன், சுந்தரேசன், அருணாச்சலம், ராசாங்கம், அப்பராசு ஆகியோர் மற்றவர்கள். 1958-இறுதியில் ஜெயங்கொண்டத்திற்கு வந்திருந்த பெரியாரைத் தங்கள் ஊருக்கு வருமாறு அழைக்கச் சென்றனர் அந்தச் சிறுவர்கள். ஆனால் சிறுவர்கள் என்பதால், பெரியாரைச் சந்திக்க அவர்களை அனுமதிக்கவில்லை. அதைக் கவனித்த பெரியார், சிறுவர்களை வருமாறு அழைத்தார். பெரியாருக்காக வாங்கி வந்த ஒரு கிலோ கறுப்புத் திராட்சையைக் கொடுத்துவிட்டு, தங்கள் ஊரின் பார்ப்பனக் கொடுமையை விவரித்தனர்.

நீங்கள் வந்து பேசினால், எல்லாம் மாறிவிடும் என்று அழைப்பு விடுத்தனர். “சிறுவர்களாக உள்ளீர்களே! உங்களால் கூட்டம் நடத்த முடியுமா?” என பெரியார் கேட்க, “தேதியை மட்டும் கொடுங்கள், மற்றவற்றை நாங்கள் பார்த்துக் கொள்கி றோம்” எனக்கூறினர். 1959 மார்ச் 31-இல் வருவதாக பெரியாரும் ஒப்புக்கொண்டார். இந்தத் தகவல் கொக்கூரில் பரவ, “ஐயரை எதிர்த்து, பெரியாரை அழைத்து வருகிறீர்களா?” என ஊரார் கண்டித்தனர். ஆனாலும், இரவு நேரத்தில் கூடிப்பேசி, கூட்டத் திற்கான பணிகளை அந்தச் சிறுவர்கள் தொடங்கினர்.

அன்றைய மாயவரம், நாகைப் பகுதிகளில் திராவிடர் கழகம் வலுவாக இருந்ததால், அவர்களின் உதவி கிடைத்தது. 20 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள நன்னிலம் வரை சென்று நிதி திரட்டினர். புதூர் ராவணன் என்ற பெரியாரியத் தொண்டர் கொக்கூர் சிறுவர்களுக்கு உறுதுணையாக பல செலவுகளை ஏற்றார். 3 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இடைக்கம் கிராமத்தில் இருந்து இரட்டை சாரட் பூட்டப்பட்ட குதிரை வண்டியில் கொக்கூருக்குப் புறப்பட்டார் பெரியார். வழியெங்கும் தோரணங்கள், வளைவுகள், வாணவேடிக்கைகள், கரகாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், சிலம்பாட்டம் என 500 பேர் கூடி வரவேற்க, கம்பீரமாக கொக்கூரில் நுழைந்தார் பெரியார். ஜாதி ஒழிப்பு முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன.

## சேலத்தில் கழக சார்பில் தொடர் கூட்டங்கள்

சேலம் மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் "இந்தியாவே திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல்" தெருமுனைக் கூட்டம் 12.07.2025 அன்று அம்மாபேட்டை ரவுண்டானா அருகில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் தலைமை வகித்தார். பரமேஷ் வரவேற்புரையாற்றினார். ஆத்தூர் நகரத் தலைவர் மகேந்திரன் அவர்களின் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகரத் தலைவர் பாலு, ஆத்தூர் நகரத் தலைவர் மகேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சேலம் மாநகரப் பொருளாளர் பிரபு, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெற்றிமுருகன் ஆகியோரின் அரசியல் நையாண்டி நிகழ்வும் நடைபெற்றது. நிறைவாக சேலம் மாநகரச் செயலாளர் தோழர் ஆனந்தி நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

கலந்துகொண்டோர்: அவினேஷ், சுதர்சன், தோழர் ராஜசேகர், பாலாஜி, சித்தார்த்தன், தமிழ் இனியன்ஆகியோர். கூட்டத்திற்கு அம்மாப்பேட்டை பகுதி வாழ் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. பெண்கள், மாணவர்கள் என அனைவரும் ஆர்வமுடன் கவனித்தனர்.

## "கட்டுநாயக்கா தாக்குதல் வெற்றி" நூல் வெளியீடு!



தாய் தமிழர் இயக்கம் ஏற்பாட்டில் டேவிட் பெரியார் தலைமையில் "கட்டுநாயக்கா தாக்குதல் வெற்றி" நூல் சென்னை வடபழனியில் 26.07.25 அன்று வெளியிடப்பட்டது. விடுதலைப் புலிகள் நடத்திய தரைவழித் தாக்குதல் பற்றி விவரிக்கிறது இந்நூல். லோகு அய்யப்பன் (புதுச்சேரி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர்), மல்லை சத்யா, இயக்குனர் அமீர், தமிழ் சாக்ரடீஸ், ஊடகவியலாளர் இந்திரகுமார், வழக்கறிஞர் அங்கயற்கண்ணி, இளைய கம்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இரவி பாரதி (காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்) தொகுத்து வழங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

தோழர் தியாகு சிறப்புப் பிரதியினை பெற்றுக் கொண்டார். தோழமை அமைப்புத் தோழர்கள் மனிதி செல்வி உட்பட பலர் கலந்து கொண்டு நூலை வாங்கி சென்றனர். இந்நிகழ்வில் கழகத் தோழர்கள் தபசிகுமரன் (தலைமை நிலையச் செயலாளர்), வேழவேந்தன் (மாவட்டத் தலைவர்), இ.ரா.உமாபதி (மாவட்டச் செயலாளர்), எட்வின் பிரபாகரன் (மாவட்ட அமைப்பாளர்), இராவணன் (தென்சென்னை மாவட்ட துணைச் செயலாளர்), வேலு (வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர்), கடலூர் சிவக்குமார், பேரன்பு (மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## இனப்படுகொலையின் பேரவலம் கருத்தரங்கம்




தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் சென்னை சர்பிடி தியாகராயர் அரங்கில் ஈழ மண்ணில் செம்மணி மனிதப் புதைக்குழி இனப்படுகொலையின் பேரவலம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழி பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார் தியாகு (பொதுச்செயலாளர் தமிழ் தேசிய விடுதலை இயக்கம்), கோவை இராமகிருட்டிணன் ( பொதுச் செயலாளர் தபெதிக), சி. மகேந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) வேல்முருகன் (சட்டமன்ற உறுப்பினர் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர்) ஆகியோர் உரையாற்றினார்.

## வேலு பிரபாகரன் நினைவேந்தல் நிகழ்வு



நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 29வது கூட்டம் அன்பு தனசேகர் (கழக தலைமைக் குழு உறுப்பினர்) தலைமையில் கழகத் தலைமை அலுவலகம் மயிலாப்பூரில் நடைபெற்றது. நிகழ்வை மாவட்டச் செயலாளர் இ.ரா.உமாபதி ஒருங்கிணைத்தார்.

மறைந்த பகுத்தறிவு இயக்குனர் வேலு பிரபாகரன் படத்தைத் திறந்து வைத்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். நினைவேந்தல் உரையாற்றிய திரைப்பட இயக்குனர் சங்ககிரி ராஜ்குமார் கொள்கையில் சமரசமற்ற கடவுள் மறுப்பாளரின் பணிகளையும், வேலு பிரபாகரன் உடன் பயணித்த அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். வேலுபிரபாகரன் இயக்கிய ‘கடவுள்’ படம் திரையிடப்பட்டது.

நிகழ்வில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் தபசி குமரன்(தலைமை நிலையச் செயலாளர்), வேழவேந்தன்(மாவட்டத் தலைவர்), ம.கி. எட்வின் பிரபாகரன்(தென்சென்னை மாவட்ட அமைப்பாளர்), ப.அருண் (இளைஞரணி அமைப்பாளர்), சேத்துபட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்), தட்சணாமூர்த்தி (வட சென்னை அமைப்பாளர்), ஆ.வ வேலு (வட சென்னை ஒருங்கிணைப்பாளர்), கோபி(திருவல்லிக்கேணி பகுதி தலைவர்), சூர்யா(திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்) மற்றும் ஊடக நண்பர்கள் பேரலை இந்திரகுமார், U2brutus மைனர், உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## 20 ஆண்டுகள் போராட்டத்துக்கு பிறகு கிடைத்த இழப்பீட்டுத் தொகை



கழக செயல் வீரர்கள் கண்ணன் மற்றும் குமார் இருவரையும் விபத்தில் கழகம் பறிகொடுத்தது. பெரியார் நினைவு நாள் சுவரொட்டிகளை ஒட்ட சென்றபோது களப்பணியில் அந்த தோழர்கள் உயிரிழத்தார்கள். உயிர் நீத்த டிசம்பர் 2005 ஆண்டு 24ம் நாள் நினைவு நாளை ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சுவரொட்டி அடித்து அவரது நினைவைப் போற்றி வருகிறது. இவர்களுக்கான காப்பீட்டுத் தொகைக்கான வழக்கு 20 ஆண்டு காலத்திற்கு மேல் நடந்தது. இப்போது அந்த தீர்ப்பு தோழர்களுக்கு காப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தேதி பெரியார் நினைவு நாள் சுவரொட்டி சென்றபோது அதிவேகத்தில் வந்த சொகுசு கார் ஒன்று மோதி தோழர்களின் உயிரைப் பறித்தது. இதற்காக காப்பீட்டுத் தொகை கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை வழக்கறிஞர் குமாரதேவன் நடத்தினார். நீதிமன்றத்தில் 20 ஆண்டுகளாக வழக்கு நிலுவையிலே இருந்தது. பிறகு முதலமைச்சர் தனிப் பிரிவில் மனு தரப்பட்டு முடங்கிக் கிடந்த வழக்குக்கு உயிரூட்டப்பட்டது. நீதிமன்றம் மறைந்த தோழர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்க உத்தரவிட்டது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தபெதிக தலைவர் ஆனூர் ஜெகதீசன் ஆகியோரை கண்ணன் மற்றும் குமார் ஆகிய தோழர்களின் தாயார்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர். வழக்கில் இறுதிவரை குடும்பத்தினருடன் உடன் நின்று வழிநடத்திய கழகத் தோழர் பிரகாஷ் (மாஸ்டர்) அவர்களைக் கழகப் பொதுச் செயலாளர் மனம் திறந்து பாராட்டினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 01, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran